பக்கங்கள்:-23

# காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | ஆடி 02 | வியாழக்கிழமை | 18.07.2024 | அதிர்வு 352

## வயோதிபப் பெண் வான் மோதி சாவு!

### கந்தளாயில் துயரம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

வீதியில் வான் மோதி வயோதிபப் பெண் ஒருவர் பரிதாபகரமாக 06▶

# “ஊடகவியலாளர்களைச் சிறையில் அடைப்பேன்” சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி மிரட்டல்




(எஸ்.நிதர்ஷன்)

செய்தி சேகரிக்கச் சென்ற ஊடகவியலாளர்களைச் சிறையில் அடைப்பேன் என்று சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மிரட்டியுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

சாவகச்சேரி நீதிமன்ற உத்தரவுக்கமைய வைத்தியர் இராமநாதன் அர்ச்சுனா நேற்றுக் காலை சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு வாக்குமூலம் வழங்கச் சென்றிருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் செய்தி அறிக்கையிட ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடகச் செயற்பட்டாளர்கள் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக 07▶



# தமிழர்களின் ஒற்றுமையை உலகுக்குக் காட்டவே பொது வேட்பாளர் விடயத்தை ஆதரிக்கின்றோம்

## வவுனியாவில் சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

(கே.வசந்தன்)

“தமிழ மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகுக்குக் காட்டுவதுதான் எங்களது விருப்பம். அதுதான் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை நாங்கள் ஆதரிக்கின்றோம்.”

- இவ்வாறு புளொட் கட்சியின் தலைவரும் யாழ்ப்பாணம் மாவட்ட நடாளுமன்ற உறுப்பினருமான தர்மலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார். 06▶

# நான்கு வயது சிறுமியின் சடலம் கிணற்றில் இருந்து நேற்று மீட்பு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கிணற்றில் இருந்து 4 வயது சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ருவன்வெல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிபோருவ பிரதேசத்தில் உள்ள கிணறு ஒன்றில் இருந்தே மேற்படி சிறுமியின் சடலம் மீட்கப்பட்டுள்ளது என்று 06▶




வழமையாக ஒவ்வொரு ஜனாதிபதித் தேர்தலிலும் சூடு பிடிக்கும் ஒரு விடயம் இம்முறை இன்னும் பட்டையைக் கிளப்பவில்லை என்று பார்த்தேன். அது இப்போது மெல்ல தலை தூக்க தொடங்கியுள்ளது.

நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று வழமையாக எழும் கோஷம்தான் அந்த விடயம்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவிலிருந்து இதுவரை வந்த எல்லா ஜனாதிபதிகளுமே – கோட்டாபய ராஜபக்ஷவைத் தவிர – இந்த நிறைவேற்றதிகார 06▶









# வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு தலைநகர் கொழும்பில் நேற்று!

“மேல் மாகாணத்தை சுமார் 50 லட்சம் மக்கள் வாழும் பெரிய நகரமாக அபிவிருத்தி செய்ய திட்டமிடப்பட்டுள்ளது. நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக எந்தவொரு அரசாங்கத்தினாலும் நடைமுறைப்படுத்தப்படாத இந்த புரட்சிகரமான வேலைத்திட்டத்தை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.”

– இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நேற்று பிற்பகல் நடைபெற்ற கொழும்பில் உள்ள அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை வழங்கும் “ரன்தொர உறுமய” நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவுக்கமைய, 2024 வரவு – செலவுத் திட்டத்தில் 20 லட்சம் பேருக்கு காணி உரிமை வழங்கும் உறுமய வேலைத்திட்டமும், கொழும்பு.அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிக்கும் இரண்டரை லட்சம் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு அந்த வீடுகளின் முழு உரிமையை வழங்கும் திட்டமும் நடைமுறைப்படுத்தப்பட்டது.

இதன் முதற்கட்டமாக கொழும்பில் அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் குறைந்த வருமானம் பெறும் 50 ஆயிரம் குடும்பங்களுக்கு முழு உரிமையுள்ள உறுதிப் பத்திரங்கள் வழங்கப்படவுள்ளதுடன், நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 937 வீடுகளும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் 180 வீடுகளும் உள்ளடங்கலாக 1,117 உறுதிப் பத்திரங்கள் நேற்று வழங்கப்பட்டன.

தொடர்ச்சி▼












# வீட்டு உரிமைப் பத்திரங்களை வழங்கும் நிகழ்வு தலைநகர் கொழும்பில் நேற்று!

தொடர்ச்சி▲

இதன்படி, நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமான மிஹிந்து செத்புர, சிறிசர உயன, மெட்ரோ வீட்டுத் தொகுதிகள் மற்றும் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் உள்ள 31 அடுக்குமாடி குடியிருப்புகளில் வசிப்பவர்களுக்கு இந்த ரன்தொர உறுமய உரிமைப்பத்திரங்கள் வழங்கப்பட உள்ளன.

இந்த நிகழ்வில் கலந்துகொண்டு ஜனாதிபதி மேலும் உரையாற்றுகையில் –

“எந்த அரசாங்கமும் செய்யாத பணியை இந்த அரசாங்கம் நிறைவேற்றியுள்ளது. சாதாரணமக்களுக்கு நாம் உரிமையை வழங்கியுள்ளோம். இந்த நாட்டின் உரிமையை விரிவுபடுத்தியுள்ளோம். மற்ற அரசாங்கங்கள் பங்குச் சந்தையில் மட்டுமே உரிமையைப் பார்த்தன.

எத்தனை பேர் பங்குகளை வாங்கினார்கள், பங்குகளின் பெறுமதி கூடுகிறதா அல்லது குறைந்ததா என்று பார்த்தார்கள். ஆனால் நாங்கள் சாதாரண மக்களைப் பார்த்தோம்.

இந்த நாட்டின் விவசாயிகள் கடந்த காலங்களில் நல்ல விளைச்சலை எமக்கு வழங்கியுள்ளனர். இல்லையேல் இந்த பொருளாதார வீழ்ச்சியில் இருந்து மீள முடியாது. எனவே, அவர்களின் நில உரிமையை உறுதி செய்ய வேண்டும். அந்த மக்களுக்கு இதுவரை நாம் காணி உரிமை வழங்கவில்லை.

இதுவரை உரிமம் மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. இப்போது நில உரிமை கொடுக்க ஆரம்பித்துள்ளோம். இந்த காலக்கெடு முடிவதற்குள் 20 லட்சத்துக்கும் மேற்பட்ட மக்களுக்கு காணி உரிமையும், அடுக்குமாடி குடியிருப்பில் வசிக்கும் மக்களுக்கு அந்த வீட்டு உரிமையும் வழங்கப்படும். அப்போது இந்த நாட்டில் காணி, வீட்டு உரிமை வைத்திருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். நாம் செய்த புரட்சியை எந்த அரசாலும் செய்ய முடியவில்லை என்றே கூற வேண்டும். இந்நாட்டு மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்காக இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அத்துடன் பெருந்தோட்ட மக்களுக்கு வீடுகள் வழங்கும் வேலைத்திட்டம் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படும். சம்பந்தப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்து இது குறித்து கலந்துரையாடினேன். புதிய சட்டம் தயாரித்து அனைவருடனும் கலந்தாலோசித்து பணிகளை மேற்கொள்ளுமாறு நான் பணிப்புரை விடுத்தேன்.

கிராமம், நகரம் மற்றும் பெருந்தோட்டப் பிரதேசங்களில் உள்ள அனைத்து மக்களுக்கும் வீட்டு மற்றும் காணி உரிமைகளை உறுதிப்படுத்தும் வகையில் செயற்பட்டு வருகின்றோம். அது இந்த அரசாங்கத்தின் முக்கிய வேலைத்திட்டம் என்பதைக் கூற வேண்டும். நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தும் வேலைத்திட்டத்தை அங்கிருந்து ஆரம்பிப்போம்.

இந்த அடுக்குமாடி குடியிருப்புகளை நிர்மாணிப்பதற்கு முன்னாள் தலைவர்கள் மூன்று பேர் பெரும் தியாகம் செய்தனர். பிரதமர் சேர் ஜோன் கொத்தலாவல பம்பலப்பிட்டியில் முதலாவது அடுக்குமாடி குடியிருப்பை நிர்மாணித்தார். ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ கொழும்பில் பாரிய அடுக்குமாடி திட்டங்களை செயற்படுத்தினார்.

மேலும், கோட்டாபய ராஜபக்ஷ அடுக்குமாடி குடியிருப்பு திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல பணியாற்றினார். அதற்காக இந்த மூவருக்கும் நன்றி கூற வேண்டும். இன்று உங்களுக்கு வழங்கப்படும் வீட்டு உறுதிப் பத்திரங்களின் மதிப்பு பத்து வருடங்களில் இரட்டிப்பாகும். எனவே, இந்தச் சொத்தை முறையாக நிர்வகித்து உங்கள் வாழ்க்கையை வெற்றியடையச் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இன்று கிடைத்த பத்திரத்தை அடகு வைக்காதீர்கள். 10 வருடங்களில் கொழும்பு அபிவிருத்தி அடையும். மேல் மாகாணத்தை 50 லட்சம் மக்கள் வாழும் பெரிய நகரமாக மாற்ற நாம் எதிர்பார்த்துள்ளோம். அப்போது, அரசாங்கம் அந்த இடங்களில் உள்ள பழைய கட்டடங்கள் அகற்றப்படும். மேலும், இந்த மாகாணத்தில் புதிய துறைமுகம் ஒன்றை அமைக்க முடியும்.

அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மற்றும் உள்ளிட்ட குழுவினர் ஏற்கனவே அதற்கான பணிகளை செய்து வருகின்றனர். அத்துடன், கொலன்னாவ பிரதேசத்தில் சில புதிய பாடசாலைகளை அமைக்க தீர்மானித்தோம். அந்தத் வேலைத்திட்டத்தை நாங்கள் தொடர்ந்து முன்னெடுக்க உள்ளோம்.” – என்றார்.








# சவால்களுக்கு மத்தியில் ஊழியர்களுக்கான சம்பளத்தை நிறுத்தாமல் அரசாங்க நிறுவனங்கள் பாதுகாக்கப்பட்டன

## உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவிப்பு

“கொரோனா தொற்றுநோய் பரவல் காலத்திலும் பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் எந்தவொரு அரச ஊழியருக்கும் சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் குறைவின்றி வழங்கி அரச சேவையை முன்னெடுத்துச் செல்ல முடிந்துள்ளமை பெரு வெற்றியாகும்.”

– இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் இராஜாங்க அமைச்சர் அசோக பிரியந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்

“கடந்த இரு வருடங்கள் மிகக் கஷ்டமாக அமைந்தது. நாம் கொவிட், பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அரச ஊழியர்களுக்கு சம்பளத்தையும் கொடுப்பனவுகளையும் வழங்க வேண்டியிருந்தது. சம்பளமும், கொடுப்பனவுகளும் நிறுத்தப்படலாம் என்றும் சிலர் சிந்தித்தனர்.

அரசாங்க சேவை முடங்கிவிடும் என்றும் நினைத்தனர். ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டலுக்கமைய அரச நிர்வாகம், உள்நாட்டு அலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சர் என்ற வகையில் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் வழிகாட்டலின் கீழ் மேற்கொள்ளப்பட்ட நிர்வாகச் செயற்பாடுகள் காரணமாக அரச சேவையைப் பாதுகாக்க முடிந்தது.

இது மிகப்பெரிய வெற்றியாகும். அதற்கு அரச ஊழியர்கள் மற்றும் நாட்டு மக்களின் முழுமையான பங்களிப்பு கிடைத்திருந்தது என்பதையும் நினைவுகூர வேண்டும்.

தேர்தல் பற்றி இன்று பலர் பல இடங்களில் பேசினாலும் அதற்கு தகுந்த சூழலை உருவாக்க உள்நாட்டு அலுவல்கள் அமைச்சு அர்பணித்துள்ளது என்பதையும் நினைவுபடுத்த வேண்டும்.” – என்றார்.

# புங்குடுதீவில் பசுவைச் சட்டவிரோதமாக வெட்டி இறைச்சியாக்கிய இருவர் கைது!









(எஸ்.நிதர்ஷன்)

யாழ். புங்குடுதீவில் திருடர்களால் பசுவுக்குக் கடுமையான அவலம் நேர்ந்துள்ளது எனவும், இது தொடர்பில் பொலிஸார் தீவிர விசாரணை முன்னெடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

புங்குடுதீவு ஜே/22 கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட வரதீவுப் பகுதியில் பற்றைக்காட்டை அப்பகுதியின் அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம சேவகர் சிறீதரன் தலைமையிலான குழுவினர் சுற்றிவளைத்தபோது சட்டவிரோதமான முறையில் கோமாதா ஒன்றை வெட்டி இறைச்சியாக்கிக் கொண்டிருந்த இரண்டு நபர்கள் தப்பியோடியுள்ளனர்.

அந்தப் பகுதியில் ஏற்கனவே பல தடவைகள் கால்நடைகளைச் சட்டவிரோதமாகக் கொலை செய்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்றன .

கடந்த ஒரு மாத காலமாக புங்குடுதீவில் சட்டவிரோத இறைச்சியாக்கும் செயற்பாடுகள் வெகுவாக குறைந்திருந்த நிலையில் மீண்டும் இவ்வாறான அசம்பாவிதங்கள் தலையெடுத்துள்ளமை குறித்து நீதித் தரப்பினரும், பொலிஸாரும் துரித கவனத்தைச் செலுத்த வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரியுள்ளனர்.


Muhurtham
Jewels
PRESENTS
PRADEEP
kumar
JULY
27
2024
BUY TICKETS ON
eventbrite
SCAN NOW
LIVE IN
TORONTO
CANADA EVENT CENTER
EVENT BY
tamil one
SV MEDIA
RADIO PARTNER
PRINTING PARTNER
E PAPER PARTNER
DESIGN BY
FM
88.9 HD3 & 105.9
INK DRIP
முரசு
DESIGN
WOLF.CA

# இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஜனாதிபதி ஆட்சி முறையை ஒழிப்போம் என்று நாட்டு மக்களுக்கு எழுத்தில் வாக்குறுதி அளித்து வந்தவர்களே.

பின்னர் அதை அவர்கள் நிறைவேற்றத் தவறினர் என்பது வேறு விடயம்.

இதில் ஒருவர் சற்று வேறுபடுகின்றார். அவர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

தான் கூறியபடி – வாக்குறுதி அளித்தபடி – நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறையை அவர் ஒழிக்கா விட்டாலும், அந்தப் பதவியின் ஆட்சி காலத்தை ஒரு வருடம் குறைத்தார். ஜனாதிபதியின் நிறைவேற்றுதிகாரங்களின் சில விடயங்களையாவது மட்டுப்படுத்தி, நாடாளுமன்றத்திற்கு கையளித்தல் போன்ற சில வேலைகளையாவது அவர் ஒப்பற்றினார்.

இப்போது நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமையை மாற்றுவது பற்றிய குரல் இன்னும் பிரதானமாக ஒலிக்கவில்லை. ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து அது மெல்ல வெளிப்பட்டிருக்கின்றது.

“நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறைமை நீக்கப்பட வேண்டும் என்ற விடயத்தில் அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்றுபட்டுள்ளன. ஆகவே அந்த முறைமை நீக்கப்பட்டாக வேண்டும்” – என்று ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரான் விக்கிரமரட்ன செய்தியாளர்களிடம் கூறியிருக்கிறார்.

பார்ப்போம். அவரது கட்சியின் வேட்பாளர் சஜித் பிரேமதாஸ இம்முறை ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்றால் அந்த முறைமையை நீக்கும் முயற்சியில் ஈடுபடுவார்களா என்பதை....!

\+ + +

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வழக்கு நாளை திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்திற்கு வருகிறது.

கட்சியின் நிர்வாகிகளான எதிராளிகள் எண்மரும் தங்கள் தரப்புப் பதில்களை நாளை நீதிமன்றத்தில் அணைப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

அவற்றின் அடிப்படையில் வழக்காளிக்கும் எதிராளிகளுக்கும் இடையில் சுமுகமான – இணக்கமான – தீர்வு ஒன்றைக் காண்பதற்கான வாய்ப்புகள் உள்ளனவா என்பது பற்றிய பூர்வாங்கத் தீர்மானத்தை எடுக்கும் ‘விளக்கத்துக்கு முன்னரான கலந்துரையாடல்’ (Pre Trial Conference) ஒன்றுக்கான திகதியை நீதிமன்றம் நாளை தீர்மானிக்கக் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

அந்தக் கலந்துரையாடலுக்கு செல்ல முன்னரான ஒரு திகதியில் தமிழரசுக் கட்சியின் மத்திய குழு கூடி ஒரு தீர்மானம் எடுக்க வேண்டி இருக்கும் என நினைக்கிறேன்.

கட்சியின் பொதுக்குழுக் கூட்டத்தை மீண்டும் கூட்டி, தேசிய மாநாட்டை புதிதாக நடத்துவது என்பதில் கட்சி நிர்வாகிகளான எதிராளிகள் மட்டத்தில் ஓர் இணக்கம் உள்ளது.

ஏற்கனவே பெரும்பாலான தொகுதிக் கிளைகளின் கூட்டம் முடிந்து விட்டதால் அவற்றின் பிரதிநிதிகளை உள்ளடக்கி 161 பேருடன் பொதுக்குழுவை மீண்டும் புதிதாகக் கூட்டலாம் என சுமந்திரன் உட்பட சிலர் கருத்து வெளியிட்டுள்ளனர். இல்லை, ஆரம்பத்திலிருந்து – மூலக் கிளைகளிலிருந்து – கூட்டங்களை கூட்டி, அதன்பின்னர் தொகுதிக் கிளைகளைத் தெரிவு செய்து, அவற்றின் பிரதிநிதிகள் மூலமாக பொதுக்குழுவை கூட்ட வேண்டும்என்றுஎன்பதுசிறிதரன்தரப்பின் நிலைப்பாடு. இவ்விடயம் தொடர்பில் ஒரு முடிவெடுப்பதற்காக மத்திய குழு விரைவில் கூட வேண்டி இருக்கும்.

மத்திய குழு என்ன முடிவு எடுத்தாலும், மூலக் கிளைகளில் இருந்து எல்லாம் புதிதாக ஆரம்பிக்கப்பட வேண்டும் என்ற தமது நிலைப்பாட்டினின்றும் தாம் மாற மாட்டார் என சிறிதரன் கடந்த வாரம் நடைபெற்ற கட்சியின் வழக்கு தொடர்பான ஆலோசனைக் கூட்டத்தில் கூறி இருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் Pre Trial Conference கூட்டத்திலும் இணக்க நிலை வராமல் இழுபடும் ஆபத்து உண்டு என்றே தோன்றுகின்றது.

# தமிழர்களின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வவுனியாவில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

புளொட் கட்சியின் தலைவர் காலமாகி 38 வருடங்கள் நிறைவடைந்து விட்டன. இந்த 38 வருடங்களுக்குள் ஆயுதப் போராட்டம் ஒரு முடிவுக்கு வந்திருந்தாலும் கூட அந்தப் போராட்டம் என்ன காரணத்துக்காக முதலில் சாத்வீகமாகவும் பின்பு ஆயுதம் எடுத்தும் தமிழ் மக்களால் தொடங்கப்பட்டதோ அந்தக் காரணம் இன்றும் இம்மியளவும் மாறாது அப்படியே இருக்கின்றது.

மாறாமல் இருப்பதைக் காட்டிலும் இந்த நாட்டில் எம்மவர்களின் தொகை இன்னும் குறைந்து வருவதைப் பார்க்கக் கூடியதாகவுள்ளது.

சகல வழிகளிலும் தமிழ் மக்கள் மிகப் பெரிய பின்னடைவைச் சந்தித்துக் கொண்டிருக்கின்றார்கள். பொருளாதாரம், அரசியல், கல்வி, எண்ணிக்கை என அது நீண்டு செல்கின்றது. அண்மைக் காலமாக இந்தியா, கனடா, ஆஸ்திரேலியா எனப் பல நாடுகளுக்குத் தமிழ் மக்கள் அதிகளவில் செல்கின்றார்கள். 15 இலட்சத்துக்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் நாட்டிலிருந்து வெளியேறியுள்ளார்கள். இந்த நிலை தொடர்கின்றது. இந்தநிலை தமிழ் மக்களை பின்னடைவுக்கும், படுபாதாளத்துக்கும் கொண்டு செல்லும்.

தனிப்பட்ட வாழ்க்கையில் அவர்கள் வெளிநாடு செல்வது சரி. அது அவர்களுடைய விருப்பம். ஆனாலும், ஒரு இனமாகப் பார்க்கின்றபோது மிகவும் பின்னடைவு. ஆனாலும், வெளிநாடுகளில் உள்ள எங்களது உறவுகள் எங்களுக்கு ஒரு உந்து சக்தியாக, பலமாக இருக்கின்றார்கள்.

போச்சுவார்த்தை என்று வருகின்ற போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கூட புலம்பெயர் தமிழ் மக்களுடன் பேச வேண்டும் எனச் சொல்கின்றார். அவர்களிடம் இருக்கக் கூடிய அந்தப் பொருளாதார பலத்தை இங்கு கொண்டு வரலாம் என ஜனாதிபதி சிந்திக்கின்றார். அது பற்றி எம்முடன் அவர் கதைக்கின்றார். ஆனாலும், தொடர்ந்து வருகின்ற எந்தவொரு அரசும் தமிழ மக்களுக்கு நியாயமான ஒரு தீர்வை வழங்கத் தயாரில்லை.

எங்களது இயக்கம் உட்பட எல்லா இயங்களிலும் இருந்தும் ஆயிரம் ஆயிரம் போராளிகள், தலைவர்கள் ஏன் மடிந்தார்களோ அதற்கான காரணம் இன்றும் இருகிக்கின்றது.

தமிழ் மக்கள் ஒற்றுமையாக இருக்கின்றோம் என்பதை உலகுக்குக் காட்டுவது தான் எங்களது விருப்பம். அதுதான் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயம். அதனை நாங்கள் ஆதரிக்கின்றோம். மக்களில் பலர் அதை விரும்புகின்றார்கள். சிலர் விரும்பவில்லை. சிலர் இது ஒரு விஷப் பரீட்சையாக இருக்கும் என்கின்றார்கள்.

சில வேளைகளில் நாம் விரும்பக் கூடிய வாக்குளைப் பெறாவிட்டால் அது பாதிக்கும் என நினைக்கின்றார்கள். கட்சிகள் ஒற்றுமையாக இருக்கின்றன, கட்சிகள் ஒற்றுமையாகச் சொல்வதை மக்கள் கேட்கின்றார்கள் என வெளிநாடுகள் நம்பும் நிலை ஏற்படத் தமிழ்ப் பொது வேட்ப்பாளர் அவசியம். இதனூடாக நாங்கள் ஒற்றுமையைக் காட்ட வேண்டும்.

தமிழரசுக் கட்சியின் முன்னாள் தலைவர் மாவைசேனாதிராஜாகூடதமிழ்ப்பொது வேட்பாளரின் முக்கியத்துவம் தொடர்பில் கூறியுள்ளார். புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிறீதரன் கூட அது சரி என்று சொல்லியுள்ளார். இப்படியாகத் தமிழரசுக் கட்சியில் இருக்கக் கூடிய பலர் தமிழ்ப் பொது வேட்பாளர் விடயத்தை ஒத்துக்கொள்கின்றார்கள்.

இப்படியாக எல்லோருமாக ஒற்றுமையாக வரக் கூடிய ஒரு நிலையில் நாம் எமது பலத்தைக் காட்டக் கூடியதாக இருக்கும். ஒற்றுமையைக் காட்டுவதன் மூலம் நாம் உலக நாடுகளிடையே எமது சரியான நிலைப்பாட்டைக் காட்டக் கூடியதாக இருக்கும். அதற்காகவே இந்த முயற்சியைச் செய்கின்றோம்.” – என்றார்.

# நான்கு வயது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ருவன்வெல்ல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொதுமக்கள் நேற்று வழங்கிய தகவலொன்றின் அடிப்படையில் பொலிஸார் சம்பவ இடத்துக்குச் சென்று சிறுமியின் சடலத்தை மீட்டுள்ளனர்.

அதேவேளை, குறித்த கிணற்றுக்கு அருகில் சிறுமியின் தாய் பேச முடியாத நிலையில் மயக்கமடைந்த நிலையில் காணப்பட்டார் என்று பிரதேச மக்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ருவன்வெல்ல பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# வயோதிபப் பெண்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

உயிரிழந்துள்ளார்.

கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து திருகோணமலை நோக்கிப் பயணித்த வான், திருகோணமலை – கந்தளாய் பிரதான வீதியில் வீதியோரம் நடந்து சென்ற பெண் மீது மோதியதில் அந்த இடத்திலேயே மேற்படி பெண் பலியாகியுள்ளார்.

நேற்றுக் காலை இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று அக்போபுர பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கந்தளாய், கித்துமுத்து பிரதேசத்தைச் சேர்ந்த 73 வயதுடைய பெண்ணே இதன்போது உயிரிழந்துள்ளார்.

வான் சாரதி நித்திரை மயக்கத்தில் இருந்ததாலேயே இந்த விபத்து இடம் பெற்றுள்ளது என்று பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

## ஊடகவியலாளர்களைச்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஒன்றுகூடினர்.

இந்நிலையில், அங்கு கூடிய ஊடகவியலாளர்கள் மற்றும் சமூக ஊடகச் செயற்பாட்டாளர்களைப் பொலிஸ் நிலையத்துக்குள் வருமாறு அழைத்த பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி குறித்த செய்தி அறிக்கையிடலில் ஈடுபட வேண்டாம் என்று எச்சரித்ததுடன் வைத்தியர் அர்ச்சுனாவிடம் எந்தவொரு நேர்காணலும் எடுக்கக்கூடாது என்றும் கூறினார்.

உத்தரவை மீறி நீங்கள் செய்தி அறிக்கையிடலில் ஈடுபட்டால் பொலிஸ் நிலையத்துக்கு முன்பாக ஒன்றுகூடினீர்கள் என்று குற்றஞ்சாட்டி உங்களைச் சிறையில் அடைப்பேன் என்று மிரட்டியுள்ளார்.

இதையடுத்து செய்தி சேகரிப்புப் பணியில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து சென்றிருந்தனர். இவ்வாறு ஊடகவியலாளர்களைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அச்சுறுத்தியமை தொடர்பில் ஊடகவியலாளர்கள் கடும் அதிருப்தியை வெளிப்படுத்தியதுடன் ஊடக அமைப்புக்களிடமும் முறையிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



TILKO BLUE OCEAN HOLDINGS (PVT) LTD

FOUNDATION STONE LAYING CEREMONY

19TH JULY 2024

The Management of Tilko Blue Ocean Holdings (Pvt) Ltd cordially invite you to the Foundation Stone Laying Ceremony of our new Condominium Project

TILKO - BLUE OCEAN CONDOMINIUM
YARL ROYAL PALACE - JAFFNA

on Friday, 19th July 2024, from 8:00 a.m. to 10:00 a.m.
at 107, Kandy Road, Jaffna. ( In-front of Old Park )

We look forward to celebrating this momentous occasion with you.
Warm regards,
Tilko Blue Ocean Holdings (Pvt) Ltd.

RSVP :
077 712 1916 Bavi | 076 699 3764 Anusha

TILKO BLUE OCEAN HOLDINGS (PVT) LTD | LINK LINK ENGINEERING | Blue Ocean GROUP OF COMPANIES LARGEST PROPERTY DEVELOPER IN SRI LANKA | KELSEY HOMES 40 Years Housing Excellence | TILKO ESTATES | TILKO hotels

9A, De Fonseka Place, Bambalapitiya, Colombo 04.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# நான்கு முனைப் போட்டி

இன்னும் சுமார் இரண்டரை மாதங்களில் ஜனாதிபதித் தேர்தல் நடந்து முடிந்துவிடும் என்பது பெரும்பாலும் உறுதியாகி வருகின்றது.

அடுத்த ஐந்து ஆண்டுகளுக்கு - புதிய மிலேனியத்தின் மூன்றாவது தசாப்தத்தின் இறுதி வரை - இலங்கைத் தீவை வழிநடத்தப் போகின்ற தலைவர் யார் என்பதைத் தீர்மானிக்கப் போகின்ற தேர்தல் இது.

இந்தத் தேர்தலில் தங்களின் வேட்பாளர் யார் என்பதை பிரதான எதிர்க்கட்சிகளான ஐக்கிய மக்கள் சக்தியும், ஜே.வி.பி. உட்பட்ட தேசிய மக்கள் சக்தியும் அறிவித்து விட்டன. அவற்றின் வேட்பாளர்களான சஜித் பிரேமதாஸவும், அநுரகுமார திஸநாயக்கவும் மும்முரப் பிரசாரத்தை ஏற்கனவே ஆரம்பித்து அதில் முழுமூச்சில் உள்ளனர்.

ஜனாதிபதித்தேர்தலுக்கானஅறிவிப்புவெளியானதும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் வேட்பாளர் யார் என்பது தொடர்பிலான அறிவிப்பை வெளியிடுவோம் என முன்னாள் ஜனாதிபதியும் பொதுஜன பெரமுனவின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கின்றார்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே மொட்டுக்கட்சியின் வேட்பாளர் தாமே என்ற இறுமாப்புடன் தேர்தல் பிரசாரத்தின் ஆரம்ப வேலைகளை அக்கட்சியின் சார்பில் ஆரம்பித்திருந்தார் கோட்டாபய ராஜபக்ஷ்.

அத்தேர்தலில் வெற்றி பெறுவதற்காக பெருத்த எடுப்புடன் ஆரவாரமாக அவர் முன் ஆயத்தம் பண்ணிய சுமார் இரண்டரை வருட காலம் கூட அவர் அப்பதவியில் இருக்க முடியவில்லை, ஓட்டம் பிடிக்க வேண்டியதாயிற்று என்பது வேறு விடயம்.

ஆனால்போனதடவைதேர்தலுக்குஇரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே வேட்பாளருடன் களத்தில் இறங்கிய கட்சி, இப்போது தேர்தலுக்கு இன்னும் இரண்டரை மாதங்கள் இருக்கையிலும் வேட்பாளரை அறிவிக்க முடியாத அவல நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றது என்பதுதான் துன்பியல் கட்டம்.

"ஜனாதிபதித் தேர்தலை வெற்றிக்கொள்ளும்வேலைத்திட்டம்எம்மிடம்உள்ளது.ஜனாதிபதித் தேர்தலில் நாம் வெற்றிபெறுவோம் என்பதே மக்களுக்கு கூறவேண்டிய நற்செய்தி. உரிய நேரம் வரும் போது எமது வேட்பாளர் யார் என்பதையும் அறிவிப்போம். மிகவும் பலம் வாய்ந்த ஒரு வேட்பாளரை நாம் முன்னிறுத்த உள்ளோம். ரணில் விக்கிரமசிங்கவை வேட்பாளராக நிறுத்துவது தொடர்பில் நாம் எவ்வித தீர்மானமும் எடுக்கவில்லை. ஏனையவர்களின் ஒத்துழைப்புடனையே வேட்பாளரை நிறுத்துவோம். நாம் அனைத்து சந்தர்ப்பங்களிலும் பொது வேட்பாளர் ஒருவரையே நிறுத்தினோம். தேர்தலின் பின்னர் எமது அரசாங்கமே அமையும்." என்றும் மஹிந்த ராஜபக்ஷ இன்று கொழும்பில் ஊடகங்களுக்கு தெரிவித்திருக்கின்றார்.

இதேசமயம் -

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் நோக்கில் பரந்தப்பட்ட கூட்டணியொன்றை அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகின்றார் என அவரது ஐக்கிய தேசியக் கட்சியின் வட்டாரங்களில் கூறப்படுகின்றது.

அவர் பல கட்சிகளின் கூட்டணியுடன் பொது வேட்பாளராக தேர்தலில் களமிறங்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளார். பொதுஜன பெரமுனவில் முக்கிய உறுப்பினர்கள் சிலரும் அரசாங்கத்தில் அமைச்சு மற்றும் பிரதி, இராஜாங்க அமைச்சுப் பதவிகளை வகிப்பவர்களும் ரணிலின் கூட்டணியில் இணைந்துகொள்ளும் உத்தரவாதத்தை வழங்கியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து 15 முதல் 20 எம்.பிக்கள் வரை ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்க உள்ளனர் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார இன்னும் கூறிக்கொண்டிருக்கின்றார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களாக ராஜித சேனாரட்ன, சம்பிக்க ரணவக்க, பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா உள்ளிட்டோரையும் தமது கூட்டணியில் இணைத்துக் கொள்ளும் முயற்சியில் அவர் ஈடுபட்டுள்ளார்.

நாடாளுமன்றஉறுப்பினர்நிமல்லான்சா தலைமையிலான குழுவும் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிக்கும் வகையில் பரந்துபட்ட கூட்டணியொன்றை உருவாக்கி வருகிறது.

இவ்வாறாக பின்புலத்தில் எதிர்வரும் 25ஆம் திகதிக்கு பின்னர் தமது கூட்டணியை வெளிப்படுத்தும் முயற்சிகளில் ரணில் விக்கிரமசிங்க தரப்பினர் ஈடுபட்டுள்ளனர் எனக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் போக்கில் பார்த்தால் ரணில் - சஜித் - அநுரகுமார ஆகியோருடன் மொட்டுக் கட்சியின் வேட்பாளரும் சேர நான்கு முனைப் போட்டி இம்முறை ஏற்படும் என்றே தோன்றுகின்றது.

# பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு இரத்து



பிரதமர் நரேந்திர மோடிக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கை பெங்களூர் நீதிமன்றம் இரத்து செய்துள்ளது.

தேர்தல் பிரசாரத்தின்போது, முஸ்லிம் சமுகத்தினரை அவமதிக்கும் வகையில் கருத்து தெரிவித்தமைக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கே இவ்வாறு இரத்து செய்யப்பட்டுள்ளது.

இந்திய மக்களை தேர்தல் கடந்த ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் இந்தியா முழுவதும் நடைபெற்றது.

இதன்போது, பாரதிய ஜனதா மற்றும் காங்கிரஸ் உள்ளிட்ட கட்சி தலைவர்கள் தங்கள் வாக்காளர்களுக்காக பிரசாரம் செய்தனர்.

அதன்படி, ராஜஸ்தானில் பாரதிய ஜனதா வேட்பாளரை ஆதரித்து பிரதமர் நரேந்திர மோடி வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டிருந்தார்.

இதன்போது, காங்கிரஸ் கட்சிக்கு வாக்களித்தால், அவர்கள் நாட்டின் வளங்களை முஸ்லிம் சமூகத்திற்கு பிரித்து கொடுப்பார்கள் என பிரதமர் நரேந்திர மோடி பிரச்சாரம் செய்தார் என கூறப்படுகின்றது.

பிரதமர் மோடியின் இந்த கருத்து சர்ச்சையை ஏற்படுத்திய நிலையில், காங்கிரஸ் மற்றும் கூட்டணி கட்சியினர் மோடிக்கு எதிராக கண்டனங்களை வெளியிட்டிருந்தனர்.

அத்துடன், பிரதமர் நரேந்திர மோடி ஒரு சமூகத்தை தாக்கி பேசினார் என தெரிவித்து பெங்களூரைச் சேர்ந்த ரகுமான் என்பவர், மக்கள் பிரதிநிதிகள் சிறப்பு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார்.

அந்த வழக்கு நேற்று முன்தினம் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இருதரப்பு வாதங்களையும் கேட்டறிந்த நீதிபதி சிவக்குமார், பிரதமர் நரேந்திர மோடியின் கருத்து பெரியளவில் தாக்கத்தை ஏற்படுத்தாது என அறிவித்து, இந்த வழக்கை இரத்து செய்து உத்தரவிட்டார்.

# டில்லியில் கேதார்நாத் கோயில் கட்டுவதற்கு எதிர்ப்பு: உத்தராகண்டில் துறவிகள், மடாதிபதிகள் ஆர்ப்பாட்டம்



உத்தராகண்டில் சார்தாம் என்ற பெயரில் பத்ரிநாத், கேதார்நாத், கங்கோத்ரி, யமுனோத்ரி ஆகிய புனித தலங்கள் உள்ளன.

இதில் ருத்ரபிரயாக் மாவட்டம் கேதார்நாத்தில் இருப்பது போல் டில்லியில் ஒரு சிவன் கோயிலை அதே பெயரில் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காக கேதார்நாத் தாம் அறக்கட்டளை, டில்லி என்ற அமைப்பு நிறுவப்பட்டுள்ளது. இதன் சார்பில் டில்லி, புராரி பகுதியில் கடந்த ஜூலை 10 ஆம் திகதி நடைபெற்ற அடிக்கல் நாட்டு விழாவில் உத்தராகண்ட் முதல்வர் புஷ்கர் சிங் தாமியும் கலந்துகொண்டார்.

இந்த நிலையில், கேதார்நாத்தில் இருப்பது போல் மற்றொரு கோயில் கட்ட எதிர்ப்புகள் வலுக்கின்றன. இதற்காக 'கேதார் சபா' எனும் பெயரில் புதிய அமைப்பு தொடங்கப்பட்டுள்ளது. இந்த அமைப்பு சார்பில் கேதார்நாத் கோயில் முன் மடாதிபதிகளும், துறவிகளும் கடந்த நான்கு நாள்களாக ஆர்ப்பாட்டம் நடத்தி வருகின்றனர்.

இதுகுறித்து கேதார் சபாவின் செய்தித்தொடர்பாளர் பங்கஜ் சுக்லா கூறும்போது,

"இந்தக் கோயில் கட்டுவதன் மூலம், கேதார்நாத்தின் முக்கியத்துவம் குறைந்து விடும். கேதார்நாத் சிவனுக்கான அபிஷேக சராணா அமிர்தம் டெல்லியில் விநியோகிக்கப்படும் என்று கேதார்நாத் தாம் அறக்கட்டளை நிர்வாகிகள் கூறுவது தவறு. இந்த செயல் சனாதனத்தின் விதிமுறைகளுக்கு எதிரானது. சராணா அமிர்தம் என்பது கேதார்நாத்தில் மட்டுமே கிடைப்பது" – என்றார்.

கேதார் சபாவின் தலைவர் ராஜ்குமார் திவாரி கூறும்போது,

"இந்த வருடம் கேதார்நாத்துக்கு அதிகமாக வந்த பக்தர்கள் எண்ணிக்கைக்கு கட்டுப்பாடுகளை மாநில அரசு விதித்துள்ளது. கூடுதலான பக்தர்களை மானஸ் கண்ட் யாத்ராவுக்கு திருப்பி விட்டனர்.

இது, அரசின் ஒரு பிரிவினர் சார்தாம் யாத்திரையை குறைத்து மதிப்பிடுவதை காட்டுகிறது. கேதார்நாத்தின் புனிதத்துவ மதிப்பீட்டை குறைக்காமல் இருப்பது உள்ளிட்ட சில கோரிக்கைகள் நிறைவேறும் வரை எங்கள் போராட்டம் தொடரும்." – என்றார்.

இதுகுறித்து டில்லி, கேதார்நாத் தாம் அறக்கட்டளையின் தலைவர் சுரேந்திரா ரவுத்தாலா கூறும்போது,

"கடும் பனிப்பொழிவு காரணமாக கேதார்நாத் கோயில் வருடத்தில் சுமார் ஐந்து மாதங்கள் மூடப்படுகிறது. இதனால் உத்தராகண்டின் கேதார்நாத்திலிருந்து புனிதப் பாறையை கொண்டுவந்து டில்லியில் அமையும் கோயில் அனைத்து நாட்களும் திறந்திருக்கும்." – என்றார்.

# ஈராக்கில் அமெரிக்க கூட்டணி படைகளின் தளம் மீது ஆளில்லா விமான தாக்குதல்



ஈராக்கின் அன்பர் மாகாணத்தில் அமைந்துள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணிப்படைகளின் தளம் மீது ஆளில்லா விமான தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

“ஒரு ஆளில்லா விமானம் தளத்திற்கு வெளியே பாதுகாப்பு அமைப்புகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது, இரண்டாவது தளத்திற்குள் வீழ்ந்தபோதிலும் எந்த காயங்களும் சேதமும் ஏற்படவில்லை என பாதுகாப்பு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

ஈரான் ஆதரவு ஆயுதக் குழுக்களின் இஸ்லாமிய எதிர்ப்பு கூட்டணி, சமீபத்திய மாதங்களில் ஈராக் மற்றும் சிரியாவில் அமெரிக்கா தலைமையிலான துருப்புக்களுக்கு எதிராக 175 இற்கும் மேற்பட்ட ரொக்கெட் மற்றும் ட்ரோன் தாக்குதல்களை நடத்தியுள்ளது.

காஸாவில் தொடரும் போரினை நிறுத்தக் கோரி, பலஸ்தீனியர்களுக்கு ஆதரவாக இந்தத் தாக்குதல்கள் நடத்தப்பட்டன என அது கூறுகிறது.

ஈராக் மற்றும் அண்டை நாடான சிரியாவின் பரந்த நிலப்பரப்பைக் கைப்பற்றிய ஐ.எஸ். அமைப்பை எதிர்த்துப் போராட 2014 இல் ஈராக் அரசாங்கத்தின் வேண்டுகோளின் பேரில் இந்த கூட்டணி ஈராக்கிற்கு அனுப்பப்பட்டது.

# ட்ரம்ப்பை கொலை செய்ய ஈரான் தரப்பில் சதித்திட்டம்

## பாதுகாப்பு அதிகரிப்பு



அமெரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை கொலை செய்வதற்கு ஈரான் தரப்பில் சதித்திட்டம் இடம்பெறுவதாகக் கிடைக்க பெற்ற தகவலை அடுத்து அவரது பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளது.

பல வாரங்களுக்கு முன்னரே இந்த பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக அமெரிக்க தேசியப் பாதுகாப்பு அதிகாரிகள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

அதேவேளை, கடந்த சனிக்கிழமை ட்ரம்ப்பை இலக்கு வைத்து பென்சில்வேனியாவில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்துக்கும் ஈரானுக்கும் தொடர்பில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும், அன்றையதினம் துப்பாக்கிச் சூட்டை நடத்திய 20 வயதான சந்தேக நபரால் எவ்வாறு ட்ரம்ப்பை நெருங்க முடிந்தது என்பது தொடர்பில் அதிகாரிகள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஈரானிய அச்சுறுத்தல் தொடர்பில் அமெரிக்க இரகசிய புலனாய்வு சேவை முன்னதாக டொனால்ட் ட்ரம்ப்பிற்கு அறியப்படுத்தி இருந்தது.

இதனையடுத்தே, அவருக்கான பாதுகாப்பும் அதிகரிக்கப்பட்டதாக அமெரிக்க தேசியப் பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

2020 ஆம் ஆண்டு ஈராக்கில் நடத்தப்பட்ட ஆளில்லா விமானத் தாக்குதலில் ஈரானின் படை பிரிவொன்றின் தளபதி காசிம் சுலைமானி கொல்லப்பட்டார்.

இந்தத் தாக்குதலுக்கு உத்தரவிட்டமைக்காக அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் டரம்ப் மற்றும் முன்னாள் வெளியுறவுத்துறை செயலாளர் மைக் போம்பியோ ஆகியோருக்கு எதிராக ஈரானிய அச்சுறுத்தல்கள் அதிகரித்துள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

# 2024 இல் சுவிட்சர்லாந்தில் வீட்டு வாடகை அதிகரிப்பு

2024 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் சுவிட்சர்லாந்தில் வீட்டு வாடகைகள் உயர்வடைந்துள்ளதாக தெரிவந்துள்ளது.

முன்னணி அமைப்பு நடத்திய ஆய்வொன்றின் முடிவில் இந்த தரவு கிடைக்கப்பெற்றுள்ளது.

அதன் படி, சுவிட்சர்லாந்தில் வீட்டு வாடகைகள் முதல் ஆறு மாதங்களில் 2.6 சதவிகிதம் வரை அதிகரித்துள்ளதாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், சுவிட்சர்லாந்தின் வீட்டு வாடகைகளில் மாற்றம் ஏற்படப்போவதில்லை என்றும் மாறாக, இன்னமும் வாடகை உயர்வே தொடரும் எனவும் சுவிஸ் ரியல் எஸ்டேட் நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குநர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், புதிய கட்டடங்கள் கட்டுதல் வரும் மாதங்களில்



அதிகரிக்கப்போவதில்லை என்பதால் நிலவும் குடியிருப்பு தட்டுப்பாடுகள் மேலும் மோசமடையும் காரணத்தால் இவ்வாறு வீட்டு வாடகை அதிகரிப்பதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதேவேளை, வாடகை உயர்வுக்கெதிராக சில பிரேரணைகள் வாக்கெடுப்புக்கு வர உள்ளன எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.















# வடக்கு மாகாண சுகாதார மேம்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்ட சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரண, வடக்கு மாகாண சுகாதார மேம்பாடு தொடர்பில் விசேட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

வடக்கு மாகாண பிரதம செயலாளரின் அலுவலகத்தில் சுகாதார அமைச்சர் தலைமையில் குறித்த கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதன்போது வடக்கு மாகாணத்தின் சுகாதார நிலைமைகள் தொடர்பிலும், மேம்படுத்தப்பட வேண்டிய சுகாதார விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சார்ள்ஸ் நிர்மலநாதன். சிவஞானம் சிறீதரன், அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம். சார்ள்ஸ், வடக்கு மாகாண பிரதம செயலாளர் எல். இளங்கோவன், சுகாதார அமைச்சின் செயலாளர் மகிபால, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்த்தன, வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள் மற்றும் விசேட வைத்தியர்கள், யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட விரிவுரையாளர்கள் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.














# மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன விஜயம்

(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)

மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாகவும், வைத்தியசாலையில் காணப்படும் குறைபாடுகள் தொடர்பாகவும் ஆராயும் கண்காணிப்பு விஜயம் ஒன்று நேற்றைய தினம் புதன்கிழமை மாலை இடம் பெற்றது.

சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தலைமையில் அமைச்சின் செயலாளர் உள்ளடங்கலான குழுவினர் நேரடியாக வைத்தியசாலைக்கு விஜயம் மேற்கொண்டமையுடன் வெளி நோயாளர் பிரிவு உட்பட வைத்திய சாலையை முழுமையாகப் பார்வையிட்டனர்.

அதனை தொடர்ந்து வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் விசேட கலந்துரையாடல் ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதன் போது மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலை பணிப்பாளர், அபிவிருத்தி குழு உறுப்பினர்களாக் அமைச்சரிடம் நேரடியாக குறைபாடுகள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக CT ஸ்கான்ன் இயந்திரம் இன்மையால் நாள்தோறும் அதிக எண்ணிக்கையான நோயாளர்கள் வெளி மாவட்டங்களுக்கு செல்கின்றனர் எனவும் மருத்துவர் பற்றாக்குறை, மருந்து பற்றாக்குறை, சுத்திகரிப்பு பணியாளர் குறைபாடு. மருத்துவ உபகரணங்கள் குறைபாடு, அம்புலன்ஸ்ப்குறைபாடு உள்பட பல்வேறு விடயங்கள் அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டன.

இந்த நிலையில் தீர்க்க கூடிய மிக முக்கிய விடயங்களை விரைவில் தீர்த்து தருவார் எனவும், ஏனைய விடயங்கள் வரவு – செலவு திட்டத்தின் ஊடாக பெற்றுத் தரப்படும் எனவும் அமைச்சர் வாக்குறுதி வழங்கினார்.

இந்த நிகழ்வில் அமைச்சருடன் நாடாளுமன்ற உறுப்பினர் காதர் மஸ்தான், சாள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் உள்பட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது

















# வடக்கு சுகாதாரத்துறை ஆளணிப் பற்றாக்குறைகளை தீர்க்க சுகாதார அமைச்சரிடம் ஆளுநர் வலியுறுத்தல்!

வடக்கு மாகாண சுகாதாரத்துறை தொடர்பான விசேட கலந்துரையாடல் சுகாதார அமைச்சர் வைத்தியர் ரமேஷ் பத்திரன தலைமையில் நேற்று நடைபெற்றது.

வடக்கு மாகாண பிரதம செயலாளர் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் நடைபெற்றது.

வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸ், நாடாளுமன்ற உறுப்பினர்கள், மத்திய சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பி.ஜி.மஹிபால, வடக்கு மாகாண பிரதம செயலாளர், எல்.இளங்கோவன் ஆகியோர் இந்த கலந்துரையாடலில் கலந்துக்கொண்டனர்.

அத்துடன், வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள், விசேட வைத்தியர்கள் உள்ளிட்ட பலரும் கூட்டத்தில் கலந்துக் கொண்டனர்.

இந்த விசேட கூட்டத்தில் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் –

“சுகாதார மற்றும் கல்வித் துறைகளே நாட்டில் மிகவும் சிக்கல் வாய்ந்தவைகளாக காணப்படுகின்றன. இந்த இரண்டு துறைகளிலும் மிகவும் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுகின்றனர்.

எனினும் மாகாணத்தை பொறுத்த வரையில் எங்களுக்கு பல சவால்கள் காணப்படுகின்றன. வளப்பற்றாக்குறை காணப்படுவதுடன், எங்கள் மீதான குற்றச்சாட்டுக்களும் காணப்படுகின்றன.

சுகாதார துறையில் பல விடயங்களை மேம்படுத்த வேண்டிய தேவை காணப்படுகின்றது. நோய் தடுப்புக்களை மேற்கொள்வதுடன் நோயாளர்களின் உரிமைகளை பாதுகாக்குமாறே எனது அதிகாரிகளுக்கு நான் கூறி வருகின்றேன்.

வரையறுக்கப்பட்ட வளங்களை பயன்படுத்தி சிறந்த சேவைகள் முன்னெடுக்கப்படுகின்றன. மாகாண சுகாதார துறையை மேம்படுத்துவது தொடர்பில் எனது அதிகாரிகளுடன் தொடர்ந்து கலந்துரையாடி வருகின்றேன்.

அத்துடன் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்ட நான்கு வைத்திய சாலைகளின் விசேட பிரிவுகளிலும் வளங்களைப் பகிர்ந்து பயன்படுத்துவது தொடர்பில் ஆராயப்படுகிறது.

முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் காணப்படும் வைத்திய சாலைகளின் குறைபாடுகள் தொடர்பில் அறிந்துள்ளோம். இந்த வைத்தியசாலைகள் தொடர்பான முன்மொழிவுகள் தயார் செய்யப்பட்டு இந்திய உயர்ஸ்தானிகரகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

மக்களை பாதுகாப்பதற்கான அதிகபட்ச முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நிலையில் மாகாண சுகாதார துறையில் காணப்படும் ஆளணிப் பற்றாக்குறைக்கு தீர்வுகளை வழங்குமாறு அமைச்சரிடம் கோரிக்கை முன்வைத்தேன். இந்த விடயம் தொடர்பில் விரைவில் தீர்வுகளை பெற்றுத்தருவதாக அமைச்சர் உறுதியளித்துள்ளார்.” – எனத் தெரிவித்தார்.









# பளை பிரதேச செயலகத்தில் ஆடிக் கூழ் வழங்கும் நிகழ்வு

ஆடிப் பிறப்பை முன்னிட்டு பளை பிரதேச செயலக நலன்புரி உத்தியோகத்தர் சங்கத்தின் ஏற்பாட்டில் நேற்றுப் புதன்கிழமை ஆடிக் கூழ் வழங்கும் நிகழ்வு பளை பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வை பளை பிரதேச செயலாளர் ஜெயசீலன் ஆரம்பித்து வைத்தார். இதில் பிரதேச செயலகத்தில் சேவைகளை பெற வந்தவர்கள் மற்றும் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.





# சைவப்புலவர் பட்டமளிப்புவிழாவும் சைவமாநாடும் நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில்!

அகில இலங்கை சைவப்புலவர் சங்கம் நடாத்தும் சைவப்புலவர் பட்டமளிப்பும் சைவமாநாடும் வரும் ஞாயிற்றுக்கிழமை காலை 8 .30 மணிக்கு நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன மண்டபத்தில் சைவப்புலவர் சி.கா.கமலநாதன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன இரண்டாவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தப் பரமாச்சாரிய சுவாமிகள் திருமுன்னிலையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்துக்கற்கைகள் பீட பீடாதிபதி பிரம்மஸ்ரீ ச.பத்மநாதன் சிறப்பு விருந்தினர்களாக நீரவைக்கந்த சுவாமி ஆலய பிரதம குரு சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள், வழக்கம்பரை முத்துமாரியம்மன் ஆலய பிரதமகுரு சுந்தர ஸ்ரீரங்கநாதக் குருக்கள், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சைவசித்தாந்தத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன், கௌரவிருந்தினராக க.கனகரத்தினம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள் .

'சைவாகமபூஷணம்' விருதினை சிவஸ்ரீ இராஜேந்திர சுவாமிநாதக் குருக்கள், சிவஸ்ரீ சுந்தர ஸ்ரீரங்கநாதக்குருக்கள் ஆகியோர் பெற்றுக் கொள்கின்றார்கள் .

'சிவநெறிப்புரவலர்' விருதினை க.கனகரத்தினம் பெற்றுக்கொள்கின்றார்.

'சைவப்புலவர்ப' ட்டத்தினை மூ. சிவகுமரன், க.கைலநாதன், கு.கந்தபாலன், த.சுதர்சன், திருமதி சிவப்பிரியா ராஜ்குமார், திருமதி பராபரம் துளசிரஞ்சன், சிவஸ்ரீ குமாரசாமிசர்மா சுவாமிநாதசர்மா, செல்வி கியோமிதா தவநேசன், திருமதி சிவதர்சனி அகிநாத் ஆகியோரும், இளஞ்சைவப்புலவர் பட்டத்தினை ம. வினோக்ஷன், அ. சதீஸ்குமார், செல்வி யோகமனி கனகேந்திரன், செல்வி தர்சிகா நடராசா, சு.ஸர்காந், செல்வி நிலாந்தினி அழகேந்திரன், செல்வி பானுப்பிரியா தில்லைமணி, செல்வி கீர்த்திகா றஞ்சன் ஆகியோர் பெற்றுக்கொள்ளவுள்ளார்கள். சைவமாநாட்டு சிறப்புரையினை சிரேஷ்டவிரிவுரையாளர் கலாநிதி தி.செல்வமனோகரன் நிகழ்த்தவுள்ளார்.

மாலை அமர்வுக்கு பிரதமவிருந்தினராக யாழ்ப்பாணப்பல்கலைக்கழக கல்வியற்றுறை பேராசிரியர் திருமதி ஜெயலக்ஷ்மி இராசநாயகம் கலந்து கொள்ளவுள்ளார்.

சைவப்புலவர் வ.தயாபரசிவம் எழுதிய 'செய்யுள் இலக்கணம்' நூல் வெளியீடு இடம்பெறும். பண்ணிசைமணி சி.தில்லைமணி சைவப்புலவர் கலாவித்தகர் கவிதா கதிரைமலை ஆகியோரின் பண்ணிசைக் கச்சேரி நிகழ்வும் இடம்பெறவுள்ளது. நன்றியுரையை அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கச் செயலாளர் சைவப்புலவர் செ.த.குமரன் வழங்கவுள்ளார்.

# ஜனாதிபதித் தேர்தலுக்கான அச்சிடும் பணிகளின் பாதுகாப்பிற்கு நாளாந்தம் 65 பொலிஸார் தேவை

## அரச அச்சகம் தெரிவிப்பு

ஜனாதிபதி தேர்தலுக்கான அச்சிடும் பணிகளின் பாதுகாப்பிற்காக நாளாந்தம் 65 பொலிஸ் உத்தியோகத்தர்கள் தேவைப்படுகின்றனர் என அரச அச்சகம் தெரிவித்துள்ளது.

வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டமையைத் தொடர்ந்து, வாக்குச்சீட்டு அச்சிடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படும் சந்தர்ப்பம் முதல் பொலிஸ் பாதுகாப்பு தேவைப்படுவதாக அரச அச்சகர் கங்கா கல்பனி லியனகே வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அவர் கூறினார்.

தேர்தல்கள் ஆணைக்குழு ஊடாக பொலிஸாருக்கு




தெளிவுபடுத்தியுள்ளமையுடன், தேவையான பாதுகாப்பை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுவதாக அரச அச்சகர் தெரிவித்துள்ளார்.

# கட்சிக்கு எதிரான வழக்கை மீளப்பெற்றார் டயனா கமகே

முன்னாள் இராஜாங்க அமைச்சர் டயனா கமகேவை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நீக்குவதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தை வலுவிழக்கச் செய்யுமாறு கோரி தாக்கல் செய்த மனுவை மீளப் பெறுவதாக அவர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி பைசர் முஸ்தபா நேற்று உயர் நீதிமன்றத்திற்கு அறிவித்தார்.

காமினி அமரசேகர, குமுதுனி விக்கிரமசிங்க மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகிய நீதியரசர்கள் குழாம் முன்னிலையில் இந்த மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த மனுவை தொடர்ந்தும் முன்னெடுக்க வேண்டிய தேவை தமது சேவைபெறுனருக்கு இல்லை என மனுதாரர் சார்பில் ஆஜரான சட்டத்



தரணிகள், மனு மீண்டும் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது தெரிவித்தனர்.

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்திற்கு ஆதரவு வழங்கியதாக குற்றஞ்சுமத்தப்பட்டு ஐக்கிய மக்கள் சக்தியின் பொது செயலாளர் உள்ளிட்ட தரப்பினர் தமது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளனர் எனவும், உரிய ஒழுக்க ஈற்று விசாரணையேனும் நடத்தாமல் எடுக்கப்பட்ட தீர்மானத்தினால் சட்டக் கோட்பாடு மீறப்பட்டுள்ளதாகவும் மனுதாரர் தமது மனுவில் முன்னர் சுட்டிக்காட்டியிருந்தார்.

மனுவின் பிரதிவாதிகளாக ஐக்கிய மக்கள் சக்தியின் பொது செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார, எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ, நாடாளுமன்ற செயலாளர் நாயகம், தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர், தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆகியோர் பெயரிடப்பட்டிருந்தனர்.

இரட்டைப் பிரஜாவுரிமை விடயத்தில் எம்.பி. பதவியை இழந்த டயானா கமகே, எம்.பி. பதவி இல்லாத நிலையில் இந்த மனுவைத் தொடர்வதில் அர்த்தம் இல்லை என்று தீர்மானைத்துள்ளார்.

# காசல்ரீ - மவுஸாகலை நீர்மட்டங்கள் உயர்வு

மத்திய மலைநாட்டின் மேற்கு சரிவுகளில் கடந்த சில நாள்களாக பெய்து வரும் கடும் மழை காரணமாக, காசல்ரீ மற்றும் மவுஸாகலை நீர்த்தேக்கங்களின் நீர்மட்டங்கள் நிரம்பி வழியும் கட்டத்தை அடைந்துள்ளன எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய விமலசுரேந்திர, லக்சபான, நவ லக்சபான, கெனியோன் மற்றும் பொல்பிட்டிய நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு காசல்ரீ மற்றும் மவுஸாகலை நீர்த்தேக்கங்களிலிருந்து நீர் விநியோகிக்கப்பட்டு வருவதாகக் குறிப்பிடப்படுகின்றது.

இதேவேளை, தென் மேல் பருவப் பெயர்ச்சி வலுவடைந்து காணப்படுவதனால் இலங்கைக்கு மேலாக நிலவுகின்ற காற்றுடனான வானிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

புத்தளம் தொடக்கம் கொழும்பு, காலி ஊடாக மாத்தறை



வரையான கரையோரத்திற்கு அப்பால் உள்ள கடல் பிராந்தியங்களின் பல இடங்களில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடும் என திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

# விரைவில் தேர்தலை நடத்துமாறு ஐ.தே.கட்சி தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை

நடத்த முடியுமான குறுகிய காலத்திற்குள் விரைவில் தேர்தலை நடத்துமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கோரிக்கை விடுத்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன மற்றும் கட்சியின் பொதுச்செயலாளர் பாலித்த ரங்கே பண்டார ஆகியோர் தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுடன் நேற்று இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளனர்.

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுயாதீன வேட்பாளராக களமிறங்குவாரென இந்த கலந்துரையாடலின் பின்னர் பாலித்த ரங்கே பண்டார தெரிவித்தார்.

இதனிடையே, தேசிய ரீதியிலான தேவையொன்று காணப்படுவதன் காரணமாகவே ஜனாதிபதி கட்சியின் சின்னத்தில் போட்டியிடவில்லை என ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன கூறினார்.

முழு நாடும் வீழ்ச்சியடைந்த சந்தர்ப்பத்தில், நாடாளுமன்றத்தில் தேசிய சபையொன்று ஸ்தாபிக்கப்பட்டதாகவும் அந்த தேசிய சபையில் இருந்து உருவாகியுள்ள வேட்பாளரே ரணில் விக்கிரமசிங்க எனவும் அவர் குறிப்பிட்டார்.

# கிரிக்கெட் வீரர் தம்மிக்க நிரோஷனின் கொலை தொடர்பில் தீவிர விசாரணை

அம்பலாங்கொடை – கந்த மாவத்தை பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் முன்னாள் கிரிக்கெட் வீரர் தம்மிக்க நிரோஷன் உயிரிழந்தார்.

அடையாளம் தெரியாத தரப்பினர் துப்பாக்கிச் சூட்டை நடத்தி விட்டு அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

41 வயதான அவர், தமது வீட்டுக்கு வெளியே நின்றிருந்த பொழுது இந்தத் துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டுள்ளது.

துப்பாக்கிச் சூட்டை நடத்திய தரப்பினர் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனப் பொலிஸ் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

சம்பவம் தொடர்பான தீவிர விசாரணைகளை, அம்பலாங்கொடை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# கத்துக்குட்டி கட்சிகளுக்கு அதிகாரத்தை வழங்குவதற்கான சந்தர்ப்பம் இதுவல்ல!

## ஐ.தே.க. தவிசாளர் வஜிர அபேவர்தன தெரிவிப்பு

“கத்துக்குட்டி கட்சிகளுக்கு எதிர்காலத்தில் ஒரு தினத்தில் நாட்டை ஆட்சி செய்ய சந்தர்ப்பம் வழங்க முடியும். ஆனால் தற்போது நாட்டை நிர்வகிக்கும் சந்தர்ப்பத்தை அரசியல் அனுபவம் முதிர்ச்சியுள்ள ரணில் விக்ரமசிங்கவுக்கு மாத்திரமே வழங்கவேண்டும். மக்கள் ஆணையுடன் ரணில் விக்கிரமசிங்க இந்த நாட்டின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாவது உறுதியாகும்.”

– இவ்வாறு ஐக்கிய தேசிய கட்சி தவிசாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தன தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய கட்சி வலய பெண் பிரதிநிதிகளுக்கு ஐக்கிய தேசிய கட்சி தலைமையகமான சிறிகொத்தவில் நேற்று இடம்பெற்ற செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“நாட்டின் பொருளாதா நெருக்கடி நிலையைப் பெண்களுக்கே அதிகம் உணர முடிந்தது. அவர்கள்தான் வீட்டின் பொருளாதாரத்தை நிர்வகித்து வருபவர்கள். பெண்கள் பாரிய பொருளாதார நெருக்கடியில் இருக்கும்போதுதான், ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்



ரணில் விககிரமசிங்க தனி ஓர் ஆசனத்துடன் நாடாளுமன்றம் சென்று பிரதமராகி, ஜனாதிபதியாகி உள்ளார். இதுதான் நாங்கள் அனைவரும் கற்றுக்கொள்ளவேண்டிய அரசியல்.

ரணில் விக்கிரமசிங்க இருக்கும் வரை எங்களுக்கு ஜனாதிபதி ஒருவரை நியமித்துக்கொள்ள முடியாது என தெரிவித்து, எமது கட்சியில் இருந்து சிலர் வேறு கட்சி அமைத்துக்கொண்டு சென்றார்கள்.

ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாஸ மரணித்த பின்னர் எங்களுடைய ஜனாதிபதிஒருவரைநியமித்துக்கொள்ள எங்களுக்கு முடியாமல் போனது. எங்களுக்குள் ஐக்கியம் இல்லாமையே அதற்கு காரணமாகும். எமது கட்சிக்குள் இருந்தவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு எதிராக செயற்பட ஆரம்பித்தனர். கட்சியில் இருந்து விரட்ட முயற்சித்தார்கள்.

ஆனால், கட்சியில் இருந்த ஐக்கியம் இல்லாமை நீங்கியதுடன் ஐக்கியம் ஏற்பட்டது. அதனால்தான் எங்களுக்கு இருந்த ஒரு ஆசனத்துடன் 134 வாக்குகளை பெற்றுக்கொண்டு ஜனாதிபதி பதவிக்கு நியமிக்கப்பட்டோம்.

அந்த நேரத்தில் நாடு மிகவும் குழப்பமான நிலையிலேயே இருந்தது. அவ்வாறு இருந்த நாட்டையே ஓர் ஆசனத்துடன் இருந்து ரணில் விக்கிரமசிங்கதற்போது மாற்றியமைத்துள்ளார். அதன் பிரகாரம் எதிர்வரும் ஒக்டோபர் 17ஆம் திகதிக்கு முன்னர் இலங்கையின் 9 ஆவது நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க மக்கள் ஆணையுடன் நியமிக்கப்படுவார் என்பதை உறுதியாக தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டை அபிவிருத்தி செய்ய முடியுமான தலைவரையே தற்போது மக்கள் எதிர்பார்க்கின்றனர். வீழ்ச்சியடைந்துள்ள நாட்டை மீண்டும் பரீட்சித்துப் பார்க்க யாருக்கும் கொடுக்க முடியாது. கத்துக்குட்டி அரசியல் கட்சிகளுக்கு எதிர்காலத்தில் ஒரு தினத்தில் நாட்டை ஆட்சி செய்ய சந்தர்ப்பம் வழங்க முடியும். ஆனால் தற்போது அதனை செய்ய முடியாது.”– என்றார்.




# புதிய மீன்பிடி சட்டத்திற்கு எதிராகச் சுவரொட்டிகள்

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

அரசினால் உருவாக்கப்பட்ட புதிய மீனவச் சட்ட வரைவுக்கு எதிராக நேற் றைய தினம் புதன்கிழமை மன்னார் நகர பகுதியில் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டன.

‘மீனவ அமைப்புக்களின் ஒன்றியம்’ எனும் பெயரில் தேசிய மீனவ ஒத்து ழைப்பு இயக்கத்தின் மன்னார் மாவட்ட இளைஞர் அமைப்பினரால் இந்தச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன.

இந்தச் சுவரொட்டியில் மீன்பிடி தொழிலை நம்பி வாழும் அனைவரின தும் வயிற்றில் அடிக்கும் புதிய மீன்பிடி சட்டத்தை தோற்கடிப்போம் என குறிப்பிடப்பட்டுள்ளது.





















# ஜனாதிபதி அலுவலகத்தில் தனியாக பிக்குகளை ஒருங்கிணைக்கும் பிரிவு

## ஜனாதிபதி அலுவலகத்தில் பிக்கு ஒருங்கிணைப்புப் பிரிவு திறந்து வைக்கப்பட்டது

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவின் பங்களிப்புடன் மகா சங்கத்தினரின் செத் பிரித் பாராயணத்துக்கு மத்தியில் இந்த அலுவலகம் நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது.

புத்தசாசனத்தைப் பாதுகாத்து முனனெடுப்பது தொடர்பான அரசமைப்பு விதந்துரைகளுக்கு அமைவாக அரசாங்கத்திற்கு வழங்கப்பட்டுள்ள பொறுப்பை உரிய முறையில் நிறைவேற்றும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஆலோசனைக்கமைய இந்த அலுவலகம் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது..

இங்கு விசேட உபதேசமொன்றை நிகழ்த்திய மல்லுவத்து பீட அனுநாயக்க சாஹித்ய சக்ரவர்த்தி கலாநிதி வண. நியங்கொட விஜிதசிறி தேரர் –

"நாடு எதிர்நோக்கும் பொருளாதார, சமூக, கலாச்சார சவால்களை முறியடித்து இலங்கையை பொருளாதார ரீதியில் வலுவூட்டும் ஜனாதிபதியின் வேலைத் திட்டத்திற்கு எப்பொழுதும் மகாசங்கத்தினரின் ஆசி கிடைக்கும்.

மகா சங்கத்தினருக்கும் ஆட்சியாளர்களுக்கும் இடையிலான உறவுகளை வலுப்படுத்த இந்த ஒருங்கிணைப்பு அலுவலகம் உதவும் ."– என்றார்.















# மின் கட்டணத் திருத்தத்துடன் நீர்க் கட்டணமும் திருத்தப்படும்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு



“புதிய மின் கட்டணத் திருத்தத்திற்கு இணைந்தவகையில், தண்ணீர்க் கட்டணத்தைக் குறைப்பது குறித்தும் ஆராயப்பட்டு வருகின்றது. இந்த வாரத்துக்குள் அது குறித்து தீர்மானம் எடுக்கப்படும்.”

– இவ்வாறு நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண் டமான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப் பிலேயே அமைச்சர் ஜீவன் தொண் டமான் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக் கையில் –

“மின் கட்டணத்தைக் குறைக்க நடவடிக்கை எடுத்தமைக்காக அமைச்சர் கஞ்சன விஜேசேகரவை பாராட்டு கின்றோம். நீர் விநியோகம் என்பது மின் கட்டணத்தைச் சார்ந்து இருக்கும் துறையாகும். எனவே, நீர் கட்டணத்தை குறைக்க இந்த மின் கட்டண திருத்தம் உதவும் என நம்பப்படுகிறது.

நீர் வழங்கல் பல்வேறு காரணி களைப் பொறுத்து அமைகின்றது. மின் கட்டணம் குறைக்கப்பட்டால், நீர்க் கட்டணமும் குறைக்கப்படும் என, நாம் ஏற்கனவே உறுதியளித்தோம். தற் போது, வட்டி விகிதங்கள் 26 வீதத்தில் இருந்து 11 வீதமாக குறைந்துள்ளன. அதனை கருத்தில் கொண்டு டொலரின் பெறுமதியின் அடிப்படையில் நீர்க் கட்டணத்தை குறைப்பது குறித்து ஆராயப்படுகிறது. நீர் வழங்கல் சபைக்குத் தேவையான இரசாயனப் பொருள்களின் விலைகள், டொலரை வைத்தே தீர்மானிக்கப்படுகிறது என்பதைக் கூற வேண்டும். இந்த வாரத்திற்குள் நீர்க் கட்டணத்தை எவ்வளவு குறைக்கலாம் என்பது குறித்து முடிவு செய்ய முடியும்.

2023 ஜனவரி மாதத்தில் நான் இந்த அமைச்சைப் பொறுப்பேற்றபோது, 1000 புதிய தொடர்புகளையேனும் வழங்க முடியவில்லை. 800 மில்லியன் டொலர் கடனுடனும், சுமார் 2.8 பில்லியன் ரூபா மாதாந்த நட்டத்துடனும் நீர் வழங்கல் சபையுடனான அமைச்சு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது. 4.5 பில்லியன் ரூபா மாதாந்த தொடர் செலவினங்களைச் செய்யும் நீர் வழங்கல் சபையானது நாட்டில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத் தியது.

தற்போது, நாம் வழங்கிய வாக்குறு திகளை நிறைவேற்றியுள்ளோம். அது மாத்திரமன்றி எமது 1,000 இற்கும் குறைவான இணைப்புகளை 113,000 வரை விரிவுபடுத்தியுள்ளோம். வரும் வாரங்களில் மேலும் 30,000 இணைப் புகளை வழங்க எதிர்பார்க்கிறோம். நீர் வழங்கல் சபையை மாதாந்தம் 2.8 பில்லியன் ரூபா நட்டத்தில் இருந்து 6.2 பில்லியன் ரூபா மாதாந்த லாபம் ஈட்டுக்கும் நிலைக்கு மாற்றியுள்ளோம். 4.5 பில்லியன் ரூபா தொடர்ச்சியான செலவீனத்துடன் எஞ்சிய தொகை கடன் சேவைக்காக பயன்படுத்தப்பட்டு நீர் வழங்கல் துறை நிலைபேறான நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சின் மூலம், கொள்கை அடிப்படையிலான கடனாக ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து 100 மில்லியன் டொலர்களைப் பெற்றுள் ளோம். அதற்கு இணையாக, நீர் வழங் கல் துறைக்கும், உப வேலைத்திட்டத்தை முன்னெடுக்க நாம் தயாராக உள்ளோம்.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் மறுசீரமைப்பு முன்மொழிவுகளான நீர்க் கட்டண சூத்திரம் மற்றும் முதலீட்டுக் கட்டமைப்பு அளவுகோல்களுக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று சபையால் அது அங்கீகரிக்கப்பட்டவுடன் மேலும் 100 மில்லியன் டொலர்கள் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்க்கிறோம்.மேலும், நீர்க் கட்டணத்தை செலுத்துவதில் பாதிக்கப்படக்கூடியவர்களையும் மிகவும் ஏழ்மையான மக்களையும் பாதுகாக்க வும் நடவடிக்கை எடுத்து வருகின்றோம். சேவை நிறுவனங்களாக வகைப்ப டுத்தப்பட்டுள்ள மருத்துவமனைகள், பாடசாலைகள் மற்றும் மத நிறுவ னங்களுக்கும் மானியங்கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அஸ்வெசும வேலைத் திட்டம்வெற்றிகரமாகநடைபெறுவதுடன், தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு மற்றும் காணி உரிமைகளை வழங்குவது தொடர்பில் ஜனாதிபதி கவனம் செலுத்துவது தொடர்பில் நாம் மகிழ்ச்சியடைகிறோம். ஜனாதிபதி மேற்கொண்டு வரும் வேலைத்திட்டங் களில் மலையக மக்கள் நம்பிக்கை அடைந்துள்ளனர். மலையக மக்களுக்கு பிரச்சினைகள் இருந்தாலும், நாங்கள் சரியான பாதையில் செல்கிறோம் என்ற நம்பிக்கை உள்ளது. இன்று மலையக மக்களின் தீர்க்கப்பட வேண்டிய பல பிரச்சினைகள் தீர்க்கப்பட்டுள்ளன.

இன்று ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலுக்கு வருகை தந்த எதிர்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நன்றியைத் தெரிவிக்கிறேன். கடந்த வருடம் இவ்வாறானதொரு கலந்துரை யாடலுக்கு மலையகத்தை பிரதிநிதித்து வப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்க ளுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்திருந் தாலும், எதிர்கட்சியில் உள்ளவர்கள் அரசியல் காரணங்களுக்காக அதில் கலந்துகொள்ளவில்லை. ஆனால் இம்முறை அவர்கள் வருகை தந்தி ருந்தார்கள். தற்போது ஜனாதிபதி முன்னெடுக்கும் வேலைத்திட்டங்கள் வெற்றிபெற்று வருகின்றமை குறித்து அவர்களுக்கும் தெரிந்துள்ளது. இதன் காரணமாக இப்போது எங்களுக்கும் நம்பிக்கை ஏற்பட்டுள்ளது. மலையக மக்களுக்கு பிரச்சினைகள் இருந்தாலும் கூட நாம் சரியான பாதையில் செல்கி றோம் என்ற நம்பிக்கை எமக்கு இருக் கின்றது. நாம் பல்வேறு சிக்கல்களை கடந்து வந்துள்ளோம். எதுவும் சுலபமாக கிடைப்பதில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்து வத்தின் கீழ் பெரும்பாலான பெருந் தோட்ட நிறுவனங்கள் சம்பளத்தை உயர்த்த ஒத்துக்கொண்டுள்ளன. அடுத்த மாதம் பெருந்தோட்ட நிறுவ னங்கள் மற்றும் தொழில் அமைச்சுடன் கலந்துரையாடல் ஒன்று இடம் பெறவுள்ளது. அதில் முழுமையான தீர்வு எட்டப்படலாம் என்ற நம்பிக்கை உள்ளது.

மேலும், எமது நீண்டநாள் கோரிக் கையின் பிரகாரம் காணி உரிமை விடயம் தொடர்பில் ஜனாதிபதி கடந்த திங்கள்கிழமை அமைச்சரவைப் பத்தி ரம் ஒன்றை சமர்ப்பித்திருந்தார். அது குறித்து இன்று ஜனாதிபதியுடன் கலந்து ரையாடல் இடம்பெற்றது.” – என்றார்.



# ஜனநாயகத்தையும், அரசமைப்பையும் விற்பதற்கு தயாராகும் ஆட்சியாளர்கள்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டு

"தங்கள் பேராசை பிடித்த வாழ்க்கை முறையைத் தக்க வைத்துக் கொள்ள நாட்டையும், ஜனநாயகத்தையும், அரசமைப்பையும் விற்கத் தயாரான ஆட்சியாளர்களும் இன்று இருக்கிறார்கள்." – இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும் ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவருமான சஜித் பிரேமதாஸ குற்றஞ்சாட்டியுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழிநுட்ப வேலைத்திட்டத்தின் திம்புலாகல, அரலகங்வில, விலயாய ஆரம்பப் பிரிவுப் பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது. அங்கு நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ஒவ்வொரு கொடுக்கல் வாங்கல்கள் போட்டித்தன்மையையும் தந்திரம், உத்தி, புத்திசாலித்தனம், மற்றும் அறிவை பயன்படுத்தி முன்னெடுக்கப்பட்டாலும், இன்று இந்நாட்டின் தேசிய நலனுக்கும் மக்களுக்கும் எதிராகவே இந்த சதிகள் அனைத்தும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன் மூலம் மக்களை ஏமாற்றும், அவதானங்களை திசை திருப்பும், பொய்யான தகவல்களை பரப்பி, நாடு சீரழிந்தாலும் தமது பதவிகளை பாதுகாத்துக் கொள்ள தற்போதைய ஆட்சியாளர்கள் தங்களால் இயன்ற அனைத்தையும் செய்து வருகின்றனர்.

நாட்டிலும் சமூகத்திலும் நிச்சயமற்ற நிலை, குழப்ப நிலையை ஏற்படுத்தியுள்ளனர். அரசமைப்புச் சட்டத்தின் பிரகாரம் நடக்க வேண்டியவை நடக்குமா, நடக்காதா என்பது தொடர்பில் நிச்சயமற்ற நிலையை உருவாக்கியுள்ளனர். ஜனநாயகத்தையும் தேசிய தேவைப்பாட்டையும் மறந்து, தங்கள் சொந்த நலவுகளையும், தமது பதவிகளையும் பாதுகாத்துக் கொள்ள பல்வேறு தரப்பினரும் செயற்பட்டு வருவதே இதற்கு காரமணமாகும்.

அரசமைப்பை அழிக்கவும், அதனை மீறவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். வங்குரோத்தான நாட்டில் கூட, தெளிவின்மை மூலம் நாடு குழப்பமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மக்களின் எண்ணங்களுடன் விளையாடி, தவறான புரிதலை ஏற்படுத்தி, நாட்டை குழப்பமடையச் செய்துள்ளனர். எனவே இவ்வாறான பொய்யான தோற்றப்பாடுகளை கண்டு மக்கள் ஏமாற வேண்டாம் என வேண்டுகோள் விடுக்கிறேன். நாட்டின் அதியுயர் சட்டமான அரசமைப்பை எவராலுமே மீற முடியாது." – என்றார்.

# ஜனாதிபதி வேட்பாளர்களின் பாதுகாப்புக்கு குழுவொன்றை நியமிக்குமாறு பரிந்துரை

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட குழுவொன்றை நியமிப்பதற்கும், அந்த சகல பாதுகாப்பு பணிகளையும் ஒருங்கிணைக்க பிரதி பொலிஸ் மா அதிபர் ஒருவரை நியமிக்கவும் பரிந்துரைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவைப் பத்திரம் ஒன்றை சமர்ப்பித்துள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணத்தில் நடைபெற்ற அமெரிக்க ஜனாதிபதித் தேர்தல் பிரச்சார பேரணியில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் தாக்கப்பட்ட நிலையில், இந்நாட்டில் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரத்தியேகப் பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கில் இந்தப் பரிந்துரை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, ஜனாதிபதித் தேர்தலில் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அந்த வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப் பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தலைமையில் இந்தக் குழுவை நியமிக்க முன்மொழியப்பட்டுள்ளது.

பாதுகாப்புப் படைகளின் பிரதானி, பொலிஸ் மா அதிபர், தேசிய புலனாய்வுத் தலைவர் மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் (தேர்தல்கள்) ஆகியோரை குழுவின் ஏனைய உறுப்பினர்களாகப் பரிந்துரைக்க முன்மொழியப்பட்டுள்ளது.

மேலும், ஜனாதிபதித் தேர்தல் காலத்தில், ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பிரத்தியேகப் பாதுகாப்பை உறுதிசெய்வது குறித்த சகல செயற்பாடுகளையும் ஒருங்கிணைக்க பிரதிப் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு குறையாத பொலிஸ் அதிகாரி ஒருவரை நியமிக்குமாறு பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவிடவும் முன்மொழியப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு ஏற்பாடுகளை தடையின்றி ஒருங்கிணைக்க மேற்கூறிய குழுவும் நியமிக்கப்படும் பொலிஸ் அதிகாரியும், தேர்தல் ஆணைக்குழுவுடன் நெருக்கமாக பணியாற்ற வேண்டும் என்றும் மேற்படி பரிந்துரையில் முன்மொழியப்பட்டுள்ளது.



### சிவபூமி அறக்கட்டளை ஒழுங்கமைப்பில்

# மூன்றரைக் கோடி ரூபா பெறுமதியான ஸ்கான் இயந்திரம் நேற்றுக் கையளிப்பு

யாழ்.போதனா வைத்தியசாலை, யாழ்.மருத்துவபீடம், சிவபூமி அறக்கட்டளை இணைந்து நடத்தும் பெண்கள் தொடர்பான கருவளச் சிகிச்சை நிலையத்திற்கு கொடையாளர் சதா.மங்களேஸ்வரன் (அபயம் அறக்கட்டளை ஊடாக) வழங்கிய. மூன்றரைக் கோடி பெறுமதியான ஸ்கான் இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு நேற்று பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்றது.

சிவபூமி அறக்கட்டளைத்தலைவர் கலாநிதி ஆறு.திருமுருகனால் மேற்படி ஸ்கான் இயந்திரம் யாழ்.போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர், யாழ். மருத்துவ பீட மகப்பேற்று வைத்திய நிபுணர்கள், தாதியர்களிடம் உத்தியோக பூர்வமாக கையளிக்கப்பட்டது.





# இன்றைய ராசி பலன்கள் - 18.07.2024




சில செயல்களில் தாமதங்கள் காணப்படும். பதற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களை அமைதிப் படுத்தும்.

உங்கள் முக்கியமான பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் ஏற்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கத் திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையை திருப்திபடுத்த இயலாது. உங்களால் முடிந்த அளவு இனிமையாகப் பேசி நிலைமையை சீராக்குங்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்புழக்கம் காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. தூக்கமின்மை காரணமாக இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும்.




இன்று உங்களுக்கு மிகவும் அமைதியான நாளாக அமையும்.சௌகரியமான நாளாக அமையும்.திருப்தியுடன் காணப்படுவீர்கள்.நீங்கள்பெரிதாக எதையோ சாதித்தது போன்று உணர்வீர்கள்.

நீங்கள் உங்கள் பணியில் இன்று இரகசியத்தை காப்பீர்கள்.நீங்கள் பணியாற்றும் முறை உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வீர்கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமைக்கு வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்கு உற்சாகமானதாக எதுவும் காணப்படாது. நீங்கள் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எடுத்த முடிவு தவறாக முடியும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக இருக்கும். பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் உறவாடும் போது சில சிக்கல்கள் காணப்படும். இது இன்றைய நாளின் இனிமையை பாதிக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்களிடம் இருக்கும் ஒவ்வொரு பணத்தையும் சேமிக்க வேண்டும். தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம்.




இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குறைந்து காணப்படும் தன்னம்பிக்கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். சில புத்திசாலித்தனமான திட்டமிடல் வெற்றியின் உச்சத்தை அடைய வழிகாட்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை திட்டமிட்டு கவனமுடன் ஆற்றுவதன் மூலம் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ளலாம். உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.எதிர்பாராத வகையில் பண இழப்பு ஏற்படலாம். செலவுகளை கட்டுபடுத்த வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயாரின் சிறிய உடல் நிலை பிரச்சினை ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியான பலனை பெறுவதற்கு உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் தன்னம்பிக்கையை இழக்காதீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.எதிர்பார்ப்புடன் நன்மை தீமைகளை ஆலோசித்து அதன்படி பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையைப் புரிந்து கொண்டு அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதனால் தோள்களில் வலிகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதகமாக இருக்கும்.இன்று கூடுதல் பலன்கள்கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று திட்டமிடலாம்.

நீங்கள் ஆற்றும் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். கடமை உணரச்சி மற்றும் சேவை மனப்பான்மையுடன் பணியாற்றுவீர்கள்.

உங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விழா குறித்து உங்கள் துணையுடன் இனைந்து திட்டமிடுவீர்கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.இது உங்கள் செயலிலும் எண்ணத்திலும் வெளிப்படும்.தியானம் மேற்கொள்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

புதிய வேலைவாய்ப்புக்கான சாத்தியம் உள்ளது.இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணி செய்வதற்கான சாதகமான நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுகளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

இன்று பண வளர்ச்சி அதிகமாக காணப்படும். சேமிப்பு திட்டங்களில் சேர்வதன் மூலம் நீங்கள் உங்கள் பணத் தேவைகளை மேம்படுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும். உங்களிடம் ஆற்றலும் உறுதியும் நிறைந்து காணப்படும்.




உங்கள் எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துவீர்கள்.அதனை தவிர்ப்பது நல்லது. இல்லையெனில் முன்னேற்றம் காண்பது அரிது. யதார்த்தமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணியில் தவறுகள் நேரலாம்.இதற்கு உங்களின் கவனக் குறைவே காரணமாக இருக்கும். இதை நீங்கள் தவிர்ப்பது நல்லது. திறமையான முறையில் ஒழுங்கமைத்து பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பைக் கொடுத்து அன்பைப் பெறுதல் என்ற கருத்துடன் இன்று பழகுவது நல்லது. இதனால் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் பொறுப்புகள் அதிகரித்து காணப்படும். இன்று இதனை தவிர்க்க முடியாது. முதுகு வலி மற்றும் செரிமானக் கோளாறு ஏற்பட வாய்ப்பு உள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 18.07.2024




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஓய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்புக்கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.

செரிமானக் கோளாறுகள் ஏற்படலாம்.




இன்று மிகுந்த ஆற்றல் காணப்படும். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இருந்தால் இன்றை நாள் உங்களுக்கானது. சுய திட்டமிடல் மற்றும் புத்திசாலித்தனம் மூலம் உங்கள் தேவை களை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பணிநிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு தேவை.

நீங்கள் இருவரும் தகுந்த பொருத்தமுடையவர்கள். உங்கள் துணையிடம் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.

இன்று ஆற்றல் மிகுந்து காணப்படுவீர்கள். எனவே ஆரோக்கியத்தை நன்கு பராமரிப்பீர்கள்.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன்காணப் படுவீர்கள்.உங்கள் நலனை மேம் படுத்தும் பயனுள்ள முடிவுகளுக்கான திட்டங்களை மேற்கொள்வீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் அதை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

பிறர் பார்த்து பின்பற்ற முடியாத பாணியில் பணி யாற்றுவீர்கள். உங்களின் இந்த தனிப்பட்ட அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றுத் தரும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் ஒருவருக்காக மற்றவர் என்பது போல ஒருமித்த உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமையுடன் காணப்படு வீர்கள். புதிய முதலீடுகள் செய்வதற்கு இது உகந்த நாள்.

இன்று சகஜமாகவும் துடிப்புடனும் காணப்படுவீர்கள்.




நீங்கள் விருந்துகள் மற்றும் ஆன் மீகச் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு இன்றைய நாளை பயனுள்ள தாக ஆக்குவீர்கள். நீங்கள் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் பிரார்த்தனையில் ஈடுபடுவீர்ககள்.

பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப் படும் சூழ்நிலையை அனுசரித்து நீங்கள் செயல்பட வேண்டும். அதற்கேற்றால் போல பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று நீங்கள் பதற்றத்துடனும் உணர்ச்சி வசப்பட்டும் காணப்படுவீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. இன்று பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.





